**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 749/2023**
**வழக்கு சாட்சி PW – 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மரகதம் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 03rd, 2024.

**(4ம் எதிரி ஆஜர். 1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் ராவுத்தர்பேரியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி ஜெயராணியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். மற்ற எதிரிகளான அண்ணாமலை, வேலுச்சாமி, மாணிக்கம் ஆகியோர்களை எனக்கு தெரியாது. அ.சா.1 கண்ணப்பன் எனது அண்ணன். அ.சா.2 வெட்டும்பெருமாள் எனது அண்ணனுடைய மச்சினன். அ.சா.3 ஆறுமுகக்கனி எனது அண்ணனின் மனைவி. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு எதிரி ஜெயராணி என்பவருக்கும், எனக்கும் இடப்பிரச்சனை இருந்து வந்தது. வீடு மனை கட்டுவதற்காக ஒரு சென்ட் இடம் ரூ.31,000/– என விலை பேசி, 6 சென்ட் இடம் என்று சொன்னார்கள். ஆனால் பத்திர அலுவலகத்தில் வைத்து 4 சென்ட் 10 மிலி இடம்

இருப்பதாக தெரிய வந்தது. எனக்கு எனது கணவர் கிடையாது. எனது கணவர் இறந்து விட்டார். எனது தங்கை எனக்கு போன் செய்து, நான் வாடகைக்கு இருப்பதால் இடத்தை முடித்துக்கொள் என்று என்னிடம் கூறினார். அதனால் நான் அந்த இடத்தை வாங்கினேன். என் தங்கைக்கு எதிரி ஜெயராணி போன் செய்துள்ளார். உனது அண்ணன் கண்ணப்பன் துட்டு, துட்டு என்று என்னை டார்ச்சர் செய்து கேட்டுக்கொண்டிருக்கிறார். எனக்கு ஆள் இருக்கிறது, உனது அண்ணனை தீர்த்து கட்டி விடுவேன் என்று எதிரி ஜெயராணி எனது தங்கைக்கும், எனக்கும் போன் செய்து கூறினார். எனது அண்ணன் 6 சென்ட் இடம் என்று கூறி, எனது தங்கைக்கு 4 சென்ட் இடம் தான் கொடுத்துள்ளார் என்றும், எனது தங்கைக்கு கணவர் இறந்து விட்டதால், அவரிடம் பணத்தை கொடுத்து விடு என்று எதிரி ஜெயராணியிடம் எனது அண்ணன் கூறினார். எனது அண்ணன் டெக்கரேசன் வேலை செய்வார். எனது அண்ணனிடம் 3 பேர் பங்சன் உள்ளது என்று சொல்லி, டெக்கரேசன் வேலை செய்ய வேண்டியுள்ளது என்று ஐந்தாம்கட்டளையூருக்கு வாங்க என்று என் அண்ணனிடம் கூறியுள்ளார்கள். பின்னர் எனது அண்ணன் பாப்பாக்குளம் சென்று விட்டு, இந்திரா நகர், இராவுத்தர்பேரி அருகே வரும்பொழுது, 3 நபர்கள் அரிவாள் வைத்து எனது அண்ணனை வெட்டியுள்ளார்கள். பின்னர் எனது அண்ணனை பார்க்க நானும், எனது தங்கை உஷாதேவியும் ஹைகிரவுண்ட் மருத்துவமனைக்கு சென்றோம். பின்னர் எனது அண்ணனிடம் போலீசார் வந்து விசாரித்துள்ளார்கள். நானும், எனது தங்கையும் அங்கிருந்தபோது, போலீசார் எங்களிடமும் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் குறுக்கு விசாரணை</u>** –

எதிரிகள் எனது அண்ணனை தாக்கியதை நான் நேரடியாக பார்க்கவில்லை. நான் இடம் வாங்கியது இந்த வழக்கிற்கு ஒரு வருடத்திற்கு முன்பு இருக்கும். நான் வாங்கியதாக கூறும் இடம் பொன்னுச்சாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் எதிரி ஜெயராணிக்கு பாத்தியப்பட்டது தான். நான் பத்திரப்பதிவு செய்வதற்கு முன்பாக பொன்னுச்சாமி இடத்திற்கான தாய் பத்திரங்களை கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். நான் போலீஸ் விசாரணையில் எனக்கு எதிரி ஜெயராணி போன் செய்து மிரட்டியதாக கூறவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை சம்பவத்திற்கு மறுநாள் இரவு 09.00 மணியளவில் விசாரித்தார்கள். போலீசார் வந்து விசாரித்தார்கள். எஸ்.ஐ வந்திருந்தாரா, என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கும் போது, நானும், எனது தங்கை உஷாதேவியும் எனது அண்ணனுடன் இருந்தோம் என்றால் சரிதான். போலீசாரிடம் ஜெயராணி, உஷாதேவிக்கு போன் செய்த விபரத்தை கூறினோம் என்றால் சரிதான். அதை போலீசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அவ்வாறு எழுதிவிட்டு சாட்சியாக என்னிடமும், உஷாதேவியிடமும் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள் என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் தான் எனது அண்ணனும் கையெழுத்து போட்டார் என்றால் சரிதான். அவ்வாறு வாக்குமூலம் அளித்த பிறகு, போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சம்பவம் நடந்த அன்று நான் ஊரில் தான் இருந்தேன். சம்பவத்தை நான் இரவு 08.00 மணிக்கு கேள்விப்பட்டேன். எங்கள் வீட்டிற்கும், சம்பவ இடத்திற்குமிடையே ஒரு அரை கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை. சம்பவம் நடந்த அன்று நான் எனது அண்ணனை பார்க்கவில்லை. நான் முதல்

விசாரணையில் கூறியது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான் குறிப்பிட்டுள்ள முன் விரோதம் பொய் என்றும், எனது சகோதரரின் தூண்டுதலின் பேரில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 749/2023</u>**
**<u>வழக்கு சாட்சி PW – 5</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | உஷாதேவி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 03rd, 2024.

**(4ம் எதிரி ஆஜர். 1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பங்களாகுடியிருப்பில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி ஜெயராணியை எனக்கு தெரியும். அவர் எங்கள் ஊர்க்காரர். மற்ற எதிரிகளான அண்ணாமலை, வேலுச்சாமி, மாணிக்கம் ஆகியோர்களை எனக்கு தெரியாது. அ.சா.1 கண்ணப்பன் எனது அண்ணன். அ.சா.2 வெட்டும்பெருமாள் எனது அண்ணனுடைய மச்சினன். அ.சா.3 ஆறுமுகக்கனி எனது அண்ணனின் மனைவி. அ.சா.4 எனது அக்கா. எனது அக்காவிற்கு கணவர் கிடையாது. அதனால் எனது அண்ணன் எதிரி ஜெயராணி என்பவரிடமிருந்து இடத்தை எனது அக்காவிற்கு வாங்கிக் கொடுத்தாங்க. 6 சென்ட் இடம் என்று சொல்லி, 4 சென்ட் 10 மிலி இடம் தான் எதிரி எனது அக்காவிற்கு கொடுத்தார். ஒரு சென்ட் ரூ.31,000/– என்று எனது அக்கா

எதிரியிடமிருந்து இடத்தை வாங்கினார். இடத்திற்கு மீதி பணத்தை எனது அண்ணன், ஆஜர் எதிரியிடம் கேட்டார். அதற்கு ஆஜர் எதிரி எனக்கு போன் செய்து, உனது அண்ணன் என்னிடம் அடிக்கடி இடத்திற்கு துட்டு கேட்டு டார்ச்சர் செய்து கொண்டிருக்கிறார், அதனால் அவன் உயிரோடு இருந்தால் தானே பணத்தை கேட்பான், அவனை தீர்த்து கட்ட அண்ணாமலை மற்றும் 3 பேரிடம் சொல்லியுள்ளேன் என்று எதிரி ஜெயராணி என்னிடம் போனில் கூறினார். அதை நான் பெரிதாக நினைக்கவில்லை. பின்னர் எனது அண்ணனை ஆள் அனுப்பி, இந்திரா நகர் அருகே வைத்து வெட்டியுள்ளார்கள். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் ஹைகிரவுண்ட் மருத்துவமனையில் சேர்த்துள்ளார்கள். மறுநாள் நான் எனது அண்ணனை ஹைகிரவுண்ட் மருத்துவமனைக்கு சென்று பார்க்க சென்றேன். அப்போது எனது அண்ணன் என்னிடம் யார், என்னை வெட்டினார்கள் என்று எனக்கு தெரியாது என்று கூறினார். உடனே நான் ஆஜர் எதிரி தான் என்னிடம் போன் செய்து உன்னை வெட்டி விடுவதாக கூறினார் என்று எனது அண்ணனிடம் கூறினேன். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் குறுக்கு விசாரணை</u> –

எனது அண்ணனை தாக்கியதாக நான் அன்றைய தினம் இரவு கேள்விப்பட்டேன். எத்தனை மணி என்று எனக்கு சரியாக சொல்ல முடியாது. நான் எனது அண்ணனை மறுநாள் சாயங்காலம் 03.00 மணிக்கு சென்று பார்த்தேன். நாங்கள் போவதற்கு முன்பாக அண்ணனை போலீசார் விசாரித்து விட்டார்கள். என்னை இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார்

விசாரிக்கவில்லை. நான் முதல் விசாரணையில் கூறியது போல், எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நான் எனது அண்ணனின் தூண்டுதலின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.